## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.5/2022

PW1 வடிவேல் நாள் 13.03.2024

**1 –ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை என் வழக்கறிஞர் படித்து காட்டினார். என் தாத்தா சொத்து எனக்கு பிரித்து கொடுக்கவில்லை. பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். என் தாத்தா பெயர் பிச்சைமுத்து. அவருடைய மனைவி பெயர் பெரியம்மாள். எனது வழக்குரையில் முத்துசாமியின் மனைவி பெயர் தான் பெரியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. பிச்சைமுத்து இறந்து 60 வருடங்களுக்கு மேல் இருக்கும். பெரியம்மாள் எப்ப இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தாவிற்கு அழகம்மாள், பச்சையம்மாள், முத்துசாமி, அய்யம்பெருமாள், ஆறுமுகம் ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். அழகம்மாள் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முத்துசாமி, ஆறுமுகம் இறந்துவிட்டார்கள். இறந்துபோன முத்துசாமிக்கு சுசீலா , பரமசிவம், சதாசிவம், பாப்பாத்தி ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். சதாசிவம், பாப்பாத்தி இறந்துவிட்டார்கள். இந்த வழக்கில் முத்துசாமியின் வாரிசாக பரமசிவத்தை மட்டும் தான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். சுசீலாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிச்சைமுத்துவின் மகள் பச்சையம்மாளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவின் பெயரில் பூர்வீகமாக எவ்வளவு நிலம் இருந்தது என்றால் சுமார் 15 ஏக்கர் இருக்கும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா பெயரில் தான் 15 ஏக்கர் இருந்தது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக ஆவணம் தாக்கல் செய்தததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1964 ல் பாகம் பிரிந்ததாக சொல்லப்படுகிறது என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு 2 ஏக்கர் , முத்துசாமிக்கு 2 ஏக்கர் நிலங்கள் பிரிந்து நான் அனுபவம் செய்து வருவதாக சொன்னால் சரியல்ல. என் பெயரில் எவ்வளவு நிலத்திற்கு பட்டா உள்ளது என்று கேட்டால் 1 ஏக்கர் நிலத்திற்கு பட்டா உள்ளது. என் அப்பா சாமிராஜனிடம் 30 செண்ட் விற்றார் . என் அப்பா கிரையம் எதுவும் வாங்கவில்லை. நான் மனை வாங்கி வீடு கட்டியுள்ளேன். அந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை. 1–வது அயிட்ட சொத்து முத்துசாமி மனைவி சிந்தாமணிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் 1 ஏக்கர் நிலம் அவர் பெயரில் உள்ளது. அதை நான் தாவாவில் காட்டியுள்ளேன். 2–வது அயிட்ட சொத்து 2–ம் பிரதிவாதியின்

தகப்பனார் முத்துசாமிக்கு அரசு அடமானம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் எனக்கு பாகப்படி உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. அண்ணன் தம்பி மூன்று பேர் பெயரில் போட சொன்னதற்கு மூத்தவர் பெயரில் தான் நிலம் ஒப்படைப்பு செய்யப்படும் என்று ஒப்படைப்பு செய்தார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா 30.05.2021 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் உயிருடன் இருக்கும்போது எந்த பாக வழக்கும் போடவில்லை என்றும், அதற்கு காரணம் ஏற்கெனவே பாகம் பிரிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் முத்துசாமியின் வாரிசுகளுக்கு பாகத்தில் பிரிந்தது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு 2 ஏக்கருக்கும் குறைவாக தான் பாகம் பிரிந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலத்தில் கிணறு வெட்டி மின்இணைப்பு வாங்கியுள்ளார்களா என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாகம் பிரிந்த 2 ஏக்கர் நிலத்தில் விற்றது போக மீதம் உள்ள நிலத்தில் போர்வெல் போட்டு மின்இணைப்பு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கில் கண்ட 6 மற்றும் 7 வது அயிட்ட சொத்துக்கள் முழுக்க முழுக்க என் அப்பாவின் பாகத்தில் பிரிந்தது என்றால் சரியல்ல. அது ஆறுமுகத்தின் வாரிசுகள் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வி.களத்தூர் ஆற்றின் வடபுறத்தில் ஆறுமுகத்திற்கும், முத்துசாமிக்கும் ஆளுக்கு ரெண்டு ஏக்கர் பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், தென்புறத்தில் அய்யம்பெருமாள் அவர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், பாகம் பிரிக்கப்படவில்லை, உழுது கொள்ள சொன்னார்கள். உழுது வருகிறோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிறப்பதற்கு முன்பாகவே என் அப்பா பாகம் பிரித்து அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகமும் , முத்துசாமிக்கும் பிரிந்த நிலம் அனுபவம் செய்து வரும் 2 ஏக்கர் நிலம் நஞ்சை நிலம் என்றால் 2 ஏக்கர் என்பது தவறு. அய்யம்பெருமாளுக்கு ஆற்றின் தென்புறம் 62 செண்ட் தான் உள்ளது என்றால் உழுவு செய்ய சொன்னார்கள். பாகம் பிரிக்கவில்லை. 1-ம் பிரதிவாதி இராணுவத்தில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். அவர் 05.03.1974 ல் 15 செண்ட் சொந்தமாக கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 10.08.1987 ல் சர்வே எண் 223/15 A-ல் 24 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 223/15 A ல் மீண்டும் 16 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.1-ம் பிரதிவாதிக்கு 62 செண்ட் நஞ்சை நிலம் ஒதுக்கப்பட்டதால் ஆறுமுகத்திற்கும் முத்துசாமிக்கும் ரூ.5 ஆயிரம் கொடுத்துவிட்டு மேட்டு காடு முட்காடுகளாக இருந்த சுமார் 5 ஏக்கர் சொத்தை தன்னுடைய பாகத்திற்காக 1-ம் பிரதிவாதி

எடுத்துக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. பணம் ஏதும் எங்களுக்கு கொடுக்கவில்லை எழுதியும் கொடுக்கவில்லை. இதனுடைய விவரம் என் அப்பாவிற்கு தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா பணம் எதுவும் வாங்கவில்லை என்று தான் சொன்னார். நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 5 ஏக்கர் நிலத்தை சீர்திருத்தம் செய்து அய்யம்பெருமாள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சீர்திருத்தம் எதுவும் செய்யவில்லை. அனுபவம் செய்து வருகிறார். 1-ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாகம் பிரிந்து அனுபவித்து வருவதால் தான் 15.10.2012 ல் 42 செண்ட் அவருடைய மகனுக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அவர் எங்களுக்கு தெரியாமல் எழுதி கொடுத்துள்ளார். 4 வருடங்களுக்கு முன்பு தான் தெரியும். அப்போது என் அப்பா உயிருடன் தான் இருந்தார். அந்த பத்திரம் செல்லாது என்று நான் வழக்கு போடவில்லை. 12 வது அயிட்ட சொத்தில் 1-ம் பிரதிவாதி அவருடைய மகள் தனலெட்சுமிக்கு தானசெட்டில்மெண்டாக 03.09.2012 ல் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 15.10.2012 ல் 1-ம் பிரதிவாதி அவருடைய பேரன் பெயருக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் அதிக நிலம் அனுபவம் செய்து வருகிறார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுத்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், உண்மையாக இருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கு பிரிந்த 62 செண்ட்டில் தான் கிணறு வெட்டி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் மூன்று பேரும் சேர்ந்து தான் வெட்டினார்கள். என் பாட்டி பெரியம்மாள் தான் கையெழுத்து போட்டு மின் இணைப்பு வாங்கி கொடுத்தார். என் அப்பா விற்ற 30 செண்ட் நிலத்தை வழக்கில் சேர்க்கவில்லை. அவர் பொது சொத்தை விற்கவில்லை. 2-ம் பிரதிவாதி பரமசிவம் அவருக்கு பிரிந்த பாகத்தை அவரது மனைவி பெயருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கிரையம் எழுதி வைத்தது உண்மைதான். அந்த பத்திரம் செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு போடவில்லை. எனக்கு அந்த சொத்தில் உரிமை இருந்திருந்தால் அந்த பத்திரம் செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. இதுவரை அவரவருக்கு பிரிந்த நிலத்திற்கு அவரவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் உள்ள பட்டாவை மறைப்பதற்காக அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஆறுமுகம் உயிருடன் இருக்கும்போது சரிபாக நிலம் ஒதுக்கப்பட்டதால் தான் அவர் வழக்கு எதுவும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல- சொத்தின் மதிப்பு தற்போது கூடிவிட்டதால் சுயலாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளதோ அவர்களையே தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பிரிந்த சொத்துக்களையும் தாவாவில் சேர்க்காததால் தாவா பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகம் கிடைக்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**